செய்தி வெளியீடு எண்: 476 நாள்: 06.03.2024

**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (06.03.2024) சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், முத்தமிழ்ப் பேரவை, டி.என்.ராஜரத்தினம் கலை அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை**

இன்றைக்கு 2015–ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் இந்த நிகழ்ச்சி அனைவருடைய ஒத்துழைப்போடும், வாழ்த்துகளோடும், சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் நடைபெறுகின்ற இந்தச் சூழ்நிலையில், உங்களை எல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அந்த துறையின் அமைச்சர் என்கின்ற முறையிலும் கூடுதல் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்த நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை உரித்தாக்கிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அரசு பொறுப்பேற்றது கொரோனா காலகட்டமாக இருந்தது. அந்த நேரத்தில் அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலில் மக்களை பாதுகாக்க வேண்டும் என்கின்ற நடவடிக்கையை உடனடியாக அந்தந்த மாவட்டத்திற்கு சென்று மக்கள் நல்வாழ்வுத்துறையின் மருத்துவர்களுடன் இணைந்து மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து மக்களை இந்த நோயிலிருந்து காப்பாற்றக் கூடிய நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் அதைத் தான் அடிக்கடி குறிப்பிடுவது வழக்கம். அதற்காக, ஏறத்தாழ சுமார் ஏழு மாதகாலம் அன்றைக்குத் தேவைப்பட்டது. அப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலை. அதே நேரத்தில், இது போன்ற பணிகள் கொஞ்சம் காலதாமதமாகி இன்றைக்கு அதெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தான் நான் குறிப்பிடுகிறேன்.

எனவே, அந்த வகையில், அவைகள் எல்லாம் முடிந்து, நிர்வாக ரீதியாக மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் செய்கின்ற பணிகளை எல்லாம் செய்துவிட்டு, இதுபோன்ற பணிகளை இன்றைக்கு விரைந்து செய்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் அறுதியிட்டு சொல்லிக்கொள்ள முடியும். அதே நேரத்தில், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு உங்களுக்கு ஞாபகமிருக்கும், நம்முடைய கலைவாணர் அரங்கத்தில் இதே போன்ற ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.

அது மட்டுமல்ல, இன்றைக்கு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, திரைத்துறையை எந்தளவுக்கு நேசித்தார் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இன்னும் சொல்லப்போனால், நான் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் அமைச்சராக இருப்பதை இந்த நேரத்தில் நான் பெருமையாக கொள்கிறேன். தன்னுடைய உயிருக்கு நிகராக அவர் நேசித்தது "தமிழ்", அதே நேரத்தில் இன்னொரு புறம் அவர் "கலைஞர்" என்ற பெயர் பெறக்கூடிய வகையில் கலைத் துறையில் பணியாற்றினார் என்பதை கட்டாயமாக இந்த நேரத்தில் இடம்பெற வேண்டிய ஒன்று. அந்த வகையில் அவர் பொறுப்பேற்ற அந்த காலகட்டத்தில், திரைப்படத் துறையினருக்கான நல வாரியம் 2009–ஆம் ஆண்டு மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்.

அதேபோல, கலைஞர் நகரம் பையனூரில் ஏறத்தாழ சுமார் 100 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்பட்டது.

இதில் பெப்சி தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட 50 ஏக்கர் நிலமும், பெப்சி ஸ்டுடியோ அமைக்க 15 ஏக்கர் நிலமும்,

தயாரிப்பாளர்களுக்கு 10 ஏக்கர் நிலமும், சின்னத்திரை கலைஞர்களுக்கு 7 ஏக்கர் நிலமும், நடிகர் சங்கத்திற்கு 8 ஏக்கர் நிலமும், மீதமுள்ள நிலங்கள் சாலைக்காக ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காகவும், சின்னத் திரையினருக்கும் சேர்த்து "திரைப்படத் துறையினர் நலவாரியம்" ஒன்றினை அன்றைக்கு அமைத்துத் தந்தார்கள். அதன் மூலம் திரைப்படத்துறை, சின்னத்திரையின் படைப்பாக்கத்தில் பங்கேற்று பணியாற்றும் 39 சங்கங்களை சார்ந்த பல்வேறு உறுப்பினர்களுக்கு இந்நலவாரியத்தின் மூலம்,

- கல்வி உதவித்தொகை,
- திருமண உதவித்தொகை,
- மகப்பேறு உதவித்தொகை போன்ற

பல்வேறு நல உதவித் திட்டங்களை பெற்று வழங்கினார்கள்.

04.09.2022 அன்று நடைபெற்ற திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் 2009 முதல் 2014ஆம் ஆண்டுகள் வரையிலான (ஏறத்தாழ 7 ஆண்டு காலம்), விருதுகள் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. ஏறத்தாழ 314 கலைஞர்களுக்கு அன்றைக்கு அந்த விருதுகள் வழங்கப்பட்டது. நானும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், மேயர், துணை மேயர் அவர்களும் கலந்து கொண்டு ஏறத்தாழ 3 மணி நேரம் அந்த விருதுகள் வழங்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கின்றேன். சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசு,

இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு என தயாரிப்பாளர்களுக்கு காசோலையும் மற்றும் சிறந்த நடிகர், நடிகையர், தொழில்நுட்ப கலைஞர்களுக்கான விருதுகள், தலா ஐந்து பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

மேலும், 2009 முதல் 2013–ஆம் ஆண்டுகளுக்கான சின்னத்திரை விருதுகள், சிறந்த நெடுந்தொடர்கள், ஆண்டின் சாதனையாளர் விருது, ஆண்டின் வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் விருதாளர்களுக்கு காசோலையும் மற்றும் சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு தலா மூன்று பவுன் தங்கப்பதக்கமும், நினைவுப்பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் 2008 – 2009 கல்வியாண்டு முதல் 2013–2014–ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் விருதுகள் 30 நபர்களுக்கு தலா ஒரு பவுன் தங்கப்பதக்கமும், தலா ரூபாய் ஐந்தாயிரத்திற்கான காசோலையும், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

தமிழ் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது" வழங்கப்படுகிறது.

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு ரூபாய் 10 இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 3 அன்று வழங்கப்படுகிறது.

2022–ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது திரு.ஆரூர்தாஸ் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் வீடு சென்று வழங்கி சிறப்பித்தார்கள்.

2023–ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "பெண்மையை போற்றுகின்ற வகையில் சிறப்பினமாக இவ்வாண்டு மட்டும் கூடுதலாக ஒரு பெண் திரைக்கலைஞர்" தேர்வு செய்யப்படவுள்ளார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் சமுதாய சிந்தனைகளுடன் கூடிய சிறந்த கலைப்படைப்புகள் மற்றும் மனித நல்லுணர்வுகளை பிரதிபலிக்கும் தரமான திரைப்படங்களை ஊக்கப்படுத்திடும் வகையில் சிறந்த தமிழ்த்திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர், சிறந்த தொழில் நுட்பக்கலைஞர்களுக்கு திரைப்பட விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட தேர்வுக் குழு தேர்ந்தெடுத்து பரிந்துரைக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு பரிசுகளும் மற்றும் மகளிரைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படத்திற்கு சிறப்புப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது.

சர்வதேச திரைப்பட விழாவிற்கு நிதியுதவி என்கின்ற வகையில், சென்னையில் பல்வேறு காலக் கட்டங்களில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் இதுவரை 8 கோடியே 35 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ரூபாய் 75 இலட்சம் வழங்கி வந்ததை 2023 ஆம் ஆண்டு சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூபாய் 85 இலட்சமாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்.

அதேபோல, நல்ல கருத்துக்களை தெரிவிக்கும் வகையிலும், சமுதாய விழிப்புணர்ச்சியும் மிக்க திரைப்படங்களைத் தரமாகவும், சிறிய முதலீட்டிலும் தயாரித்து வெளியிடுவோரை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் வாயிலாக, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு திரைப்படத்திற்கும் இத்திட்டத்தின் வாயிலாக ரூபாய் ஏழு இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

**<u>சின்னத்திரை விருதுகள்</u>**

இல்லத்தரசிகளின் பொழுதுபோக்கில் மிகப்பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ள சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள் அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பில் சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**<u>தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன விருதுகள்</u>**

தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த படப்பதனிடுபவர் ஆகியோருக்கு வல்லுநர் குழுவால் தேர்வு செய்யப்படும் மாணவர்களின் குறும்படங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான திரையரங்குகளின் "C" form Licence வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதை, திரையரங்கம் கட்டப்பட்ட காலத்தைப் பொறுத்து (Age of Building) மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை திரையங்குகளின் "C" form Licence புதுப்பிக்க திருத்தப்பட்ட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், நவீன காலத்திற்கேற்ப திரையரங்குகள் மாற்றமடைந்துள்ளதால் திரைப்பட கருவி இயக்குபவர் உரிமத்தினை பெறுவதற்கு இருந்த சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு, Digital Projection Technician's Licence எளிதில் பெறுவதற்கேற்ப உரிய திருத்தங்களுடன் கூடிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் சென்னைக்கு அருகே திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் அதிநவீன திரைப்பட நகரம் உருவாக்கப்படவுள்ளது. சுமார் 150 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 500 கோடி மதிப்பீட்டில், வி.எப்.எக்ஸ்., அனிமேஷன் மற்றும் எல்.இ.டி சுவர் போன்ற நவீன தொழில்

நுட்பங்களுடன் கூடிய படப்பிடிப்பு தளங்கள், படத்தயாரிப்புக்குப் பிந்தைய பணிகளுக்கான கட்டமைப்புகள் மற்றும் படப்பிடிப்புக்கு தேவையான கட்டமைப்புகள் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைப்பது தொடர்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் அதிநவீன தொழில்நுட்பங்களுடன் 4 படப்பிடிப்பு தளங்கள் அரசு மற்றும் தனியார் பங்களிப்பில் அமைக்கப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைத் துறையினருக்கு அறிவித்துள்ள திட்டங்கள் ஏராளமாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு வழங்கப்பட்டு வருகிறது.

அதோடு இன்றைகு இந்த துறை சிறப்பாக நடைபெறுவதற்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான பல்வேறு வழிகாட்டுதல்களையும் எங்களுக்கு எல்லாம் வழங்கி வருகிறார்கள்.

தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எந்த அளவுக்கு இந்த திரையுலகினரை பேணிக்காத்தாரோ, அதேபோல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த கலைத்துறையினரை பேணிப் பாதுக்காத்து வருகிறார்கள். அந்த வகையில், 2016–ஆம் ஆண்டிலிருந்து 2023–ஆம் ஆண்டு வரை விருதுகள் வழங்குவதற்கு நீதிபதிகள் கொண்ட 3 குழுக்கள் அமைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அதுவும் விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில்

தெரிவித்து புதிதாக ஏறத்தாழ சுமார் 39 பேர்கள் விருதுகளை பெற இருக்கின்றீர்கள். அவர்களுக்கு எங்கள் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளை அரசின் சார்பிலும், துறையின் சார்பிலும் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in